Registered No. M. 801

"உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேரோர் பணிக்கு"

THE . . .

AGRICULTURIST

A Monthly Journal devoted to
Agriculture and its allied Subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப்பத்திரிகை

Vol. 1	சௌமிய௵ ஆனி ௴ 1௳	Part. 3
புத்தகம். 1	1909௵ ஜூன் ௴ 14௳	பிரதி. 3

Contents

Transplanting of Single seedlings 33
Sunnhemp as green manure crop 39
A fine short duration variety of Paddy By. M. R. Ry. P. N. Muhammad Miran Sahib Avl. Settlement Deputy Collector Tinnevelly 42
Month's operations ... 44
News & Notes ... 47

பொருளடக்கம்

ஒற்றைநாற்று நடுகை 33
சடம்புப் பசுந்தாள் பயிர் 39
நெல் தினிசுகளில் ஒரு நேர்த்தியான இளவித்து ம-ா-ா-ஸ்ரீ P. N. மகமது மீரான் சாயபு அவர்கள் செட்டில்மெண்ட் டிப்டிகலெக்டர் திருநெல்வேலி 42
மாதப் பருவங்கள் ... 44
குறிப்புகள் 47

வருஷசந்தா தபால்கூலி உள்பட அணா 12

Annual Subscription including Postage As. 12 only

Edited and Published by

J. R. RANGARAJU,

5, Mount Road, Madras

[All Rights reserved]

கிருஷிகன்

மாதந்தோறும் பிரசுரமாகும் ஓர் விவசாயப்பத்திரிகை. ஷை பத்திரிகையானது விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமுமுள்ளவர்களால் எழுதப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து நமது தேசத்து விவசாயம் விருத்தியடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் காகிதக்கிறையமும் அச்சுக்கூலியும் தபால் சிலவும் மாத்திரம் கிடைக்கும்படிக்கான குறைந்த சந்தா வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா அங்கீகரிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு வருஷமும் சித்திரைமீ முதல் ஆரம்பமாகிறது. கடந்த சஞ்சிகைக் கூடுமானவரையில் சப்ளை செய்யப்படும்.

சந்தா விபரம்	ரூ.	அ.	பை.
இந்தியா, பர்மா, சிலோனுக்கு மாத்திரம் தபாற்கூலி உள்பட வருஷம் ஒன்றுக்கு	0	12	0
தனிப்பிரதி	0	2	0

மற்ற அயல்தேசங்களுக்கு தபால்கூலி மாத்திரம் பிரத்தியேகம்.

விளம்பர விகிதங்கள்

பக்கம் ஒன்றுக்கு	ரூ. அ. ப.	$\frac{1}{2}$ பக்கத்திற்கு	ரூ. அ. ப.	கால் பக்கத்திற்கு	ரூ. அ. ப.
1 மாதத்திற்கு	5 0 0	1 மாதத்திற்கு	3 0 0	1 மாதத்திற்கு	2 0 0
6 மாதங்களுக்கு	25 0 0	6 மாதத்திற்கு	15 0 0	6 மாதத்திற்கு	10 0 0
1 வருஷத்திற்கு	40 0 0	1 வருஷத்திற்கு	24 0 0	1 வருஷத்திற்கு	16 0 0

இராஜாம்பாள்

துப்பு அறியும் தமிழ் நாவல்

20 பவுண்களடங்கிய பளபளப்பான காகிதத்தில் டெம்மி 184-பக்கங்களடங்கியது. மேலும் இதில் இங்கிலீஷ் நாவல்களைப்போல் இதுவரையிலும் இல்லாத புதுமாதிரியாக கண்டோர் மனதைக் கவரும் மூன்று சித்திரபடங்கள் ஆர்ட்பேப்பர் என்னும் வளவளப்பான காகிதத்தில் அச்சடித்து கோர்க்கப்பட்டிருக்கின்றன. இதைப்போலொத்த நாவல் இதுவரையில் வெளிவந்ததில்லையென்று பத்திராசிரியர்களாலும், வாங்கி வாசித்த எல்லோராலும் புகழப்பெற்றது. நாம் கேட்காமலே இதைப் புகழ்ந்து அநேக கனவான்களும், மாது சிரோண்மணிகளும், நூற்றுக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த நாவலை வாசிக்க ஆரம்பிவித்து விட்டால் முடிக்கும் வரை வேறு வேலைசெய்ய மனம் வராதென்றால் வேறு என்ன சொல்வது.

இந்த அபூர்வமாகிய நாவலின் விலை அணா 12. தபாற்கூலி வி. பி. கமிஷன் அணா 2. பிரத்தியேகம்.

வேண்டியவர்கள்

ரங்க ராஜு அண்டு பிரதர்ஸ்

5. மௌண்ட்ரோட், சென்னை.

என்று எழுதி வி. பி. மூலமாய் பெற்றுக்கொள்ளலாம்.

“கிருஷிகன்” ஆபீஸ்

5, மௌண்ட்ரோட்,
சென்னை, 14-6-09.

ஐயா,

இந்தப்பத்திரிகை நமதுசொந்த லாபத்திற்காக அல்லாமல் பொதுஜன உபகாரார்த்தமாகவே நடத்தப்படுகிறது. இதை சர்வசாதாரணமான கிருஷிகரும் வாங்கிவாசிக்கும்படியாய் அதன்வருஷசந்தாதபால்கூலிஉள்பட 12 அணாவாகவைக்கப்பட்டிருக்கிறது. குறைந்தது 2000 சந்தாதாரர்கள் இருந்தால்தான் எமது சொந்தகைப்பொருள் நஷ்டமன்றி இப்பத்திரிகையை நடத்தமுடியும். தங்களுக்கு வருஷத்திற்கு 12 அணா இவ்விஷயத்தில் செலவழிப்பது பெரிதல்ல. ஆனால் அதனால்உண்டாகும் பொது நன்மையோ மிகவும் அதிகம் இந்தக்காரணத்தைமட்டுமாவது உத்தேசித்து தாங்கள் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்கள் ஆகவேண்டுமென்று கோருகிறோம். தாங்கள் தயவுசெய்து இத்துடன் அனுப்பியிருக்கும் போஸ்ட்கார்டில் பத்திரிகையைத் தங்களுக்கு அனுப்பும்படி எழுதியனுப்புவீர்களென்று நம்புகிறோம்.

இத்துடன் தங்களுக்குமூன்று சஞ்சிகைகள் அனுப்பியிருக்கிறோம். இனிதங்களிடமிருந்து உத்தரவுவந்தாலன்றி அடுத்த சஞ்சிகைகள் அனுப்பப்படமாட்டாது.

பத்திராதிபர்

THE AGRICULTURIST

A monthly Journal devoted to agriculture and its allied subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

Vol. I புத்தகம் I	சௌமிய௵ ஆனி௴ 1௳ 1909௵ ஜூன்௴ 14௳	No. 3 பிரதி 3

ஒற்றைநாற்று நடுகை

TRANSPLANTING OF SINGLE SEEDLINGS

தென் ஜில்லாக்களிலுள்ள இருபூநன்செய் நிலங்களில் இந்த மாதம் நெல் சாகுபடி செய்வதில் விதைப்பினால் அநுகூலமுண்டாகாதென்றும் நாற்றுவிட்டு நடுகை செய்யவேண்டுமென்றும் சென்ற மாதச் சஞ்சிகையில் சொன்னோம். அப்படி நடுகை செய்வதிலும் விசேஷ அநுகூலமுண்டாக்கத்தக்க ஒரு நூதனமுறையை இந்த சஞ்சிகையில் வெளியிடுகிறோம்.

தற்காலத்தில் அநேகவிடங்களில் நெல்நாற்றுவிடுவதில் கிருஷிகர் பூர்வீகவழக்கத்தையே முக்கியமாக அநுஷ்டித்து வருகிறார்கள். 8-சென்டு நிலத்தில் நூறு அல்லது நூற்று இருபத்தைந்து பக்கா நெல்விதையை விதைக்கிறார்கள். சிலவிடங்களில் இந்த அளவில் சற்று குறைத்து விடுகிறார்கள். என்றாலும், "ஒரு ஏக்கர் நிலம் நடுவதற்கு எவ்வளவு நாற்றுதான் அவசியம்?" "அந்த நாற்று உண்டாவதற்கு எவ்வளவுவிதை போதுமானது?" என்று நன்றாய் யோசித்து, விசாரித்து பரீக்ஷித்து அறிந்து ஒருவரும் நாற்றுவிடுவதில்லை. இவ்விஷயம் விவசாயத்தில் வெகுமுக்கியமானது. நன்செய் சாகுபடியில் "நடுகை செய்தலை" விட அதிக முக்கியமான காரியம் வேறொன்றுமில்லையெனச் சொல்லலாம். ஆகையால் நாமிங்கு தெரிவிக்கும் விஷயத்தைக் கிருஷிகர் நன்றாய் யோசிக்க வேண்டும்.

"ஏக்கர் ஒன்று நட எவ்வளவு நாற்று அவசியம்?" என்று யோசிக்கும்போது (1) "ஒவ்வொரு நடுகையிலும் எத்தனை நாற்று முதல்களைச்சேர்த்து நடவேண்டும்?" (2) "எவ்வளவு இடைவிட்டு ஒவ்வொரு நடுகையையும் போடவேண்டும்?" என்னும் முக்கியமான கேள்விகள் ஜனிக்கின்றன. இந்த விஷயங்களைப்பற்றி அநேகவிடங்களில் அநேகவிதமான அபிப்பிராயங்களைத் தெரிவிப்பார்கள். என்றாலும் வெகுவாக ஒருவிஷயத்தை நன்றாய்ப் பரீக்ஷித்து, தொடர்ச்சியாய் அநேகவருஷங்களுக்கு அம்முறைகளை விடாமல் நடத்திப்பார்த்து, அவைகளின் தாரதம்மியங்களைக் கவனித்தறிந்தவர்கள் சொல்வதே சரியான அபிப்பிராயமெனக் கொள்ளவேண்டும். அதைவிட்டு ஏதோ ஒருவருஷத்தில் ஏதோ ஒருகாலத்தில், ஏதோ ஓரிடத்தில், எதுவோ ஒரு தினிசுவிதையை யாரோஒருவர் விதைத்து நாற்றுண்டாக்கி, ஏதோ ஒருவிதமாக நடுகைசெய்து அதனால் சரியான விளைவு கைக்கு வரவில்லையென்று சொல்லும் அபிப்பிராயம் எல்லாராலும் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. உதாரணமாகத் தஞ்சாவூர் ஜில்லா பட்டுக்கோட்டைத் தாலுகாவிலுள்ள ஒரு மிராசுதார், பாங்குநெல் பயிரிடுவது நல்லதெனக் கேள்விப்பட்டு ஏதோ ஒருமாதத்தில் குறைந்தவிதையை ஒரு நாற்றங்காலில் நாற்றுவிட்டார். கால்களில் தண்ணீர் வர இரண்டுமாதக்காலம் சென்றது. அதற்குப்பின் நன்செய் நிலங்களில் தண்ணீர்பாய்ச்சி உழுது சேறாக்கி நடுகைசெய்யும்போது நாற்றின் வயது 80-நாளாய்விட்டது. எண்பதுநாள் கழித்து நட்ட நடுகை எப்படி தலையெடுக்கும்? மிராசுதாரோ நூதனமாகத் தான் கற்றுக்கொண்ட முறையை நடத்திப் பார்க்கவேண்டும் என்னும்அதிக ஆவலால் தூண்டப்பட்டவரானதால், காலதாமதப்பட்டுப்போனபின்னும் கூட அந்த நாற்றைப்பிடுங்கி ஒவ்வொன்றாய் நடும்படி தன் வேலையாட்களைக் கட்டாயப்படுத்தினார். அந்தப் பயிர் சரியாய் உண்டாகாதென்று அந்த வேலையாட்கள் சொன்னார்களேயன்றி, வயதுமுற்றின நாற்றை நடுவதால் பலனில்லை யென்பதை அவருக்குத் தெளிவாக விளக்கிச் சொல்லவில்லை. அவர்கள் சொல்லும் ஆக்ஷேபணையெல்லாம் நூதனமுறையை அநுஷ்டிக்கக்கூடாதென்னும் முறட்டுப் பிடிவாதத்தால் செய்யும் ஆக்ஷேபணைகள் என்று அவர் புத்தியில் பட்டது. ஆகையால் அவர்கள் எவ்வளவு ஆக்ஷேபித்தும், ஒரே பிடிவாதமாய் அந்த நாற்றை ஒவ்வொன்றாய் நட்டேதீரவேண்டும் என்று முறண்டினார். கடைசியில் அது பலனற்றுப்போயிற்று. கொஞ்சக்காலத்துக்குமுன் நாம் அவரை சந்தித்தபோது பாங்குநெல் சாகுபடி பட்டுக்கோட்டை தாலூகாவுக்கே சரிப்படாதென்று தன்னூர்க்காரர் எல்லாரும் சொல்வதாயும், தான் பரீக்ஷித்ததிலும் அநுகூலமடையவில்லையென்றும் பொதுவாய்ச் சொன்னார். பாங்குநெல்லை அநேகவருஷமாகப் பயிரிட்டு நாம் அநுபோகம் அடைந்துள்ளோமாதலால், அவர் சாகுபடிசெய்த

காலம், இடம், பருவம் முதலிய விஷயங்களைப்பற்றியபலகேள்விகளை க்கேட்டபோது மேற்சொன்ன விஷயங்கள் வெளியாயின. விவசாய விஷயங்களில் கல்வியறிவுமட்டும் போதாது. அநுபோகமும் காலம், இடம், சாதனம் இவைகளுக்கேற்ற யுக்தியும் அத்தியாவசியம். ஆகையால் கல்வியறிவும், கிருஷி விஷயங்களில் அநுபோகமும், பரீக்ஷாக்ஞானமும் உள்ளவர்களால் ஒரு விவசாய முறை சரியானதென்று கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் அம்முறையை எல்லாரும் அநுஷ்டிப்பதில் சந்தேகங்கொள்ளக்கூடாது. ஆனால் அந்த நூதனமுறை இன்னதென்றும், அது நடத்தவேண்டியகாலம் இதுவென்றும், அதற்காகச் செய்யவேண்டிய பருவங்கள் இப்படிப்பட்டனவென்றும் சரியாய் அறிந்துகொள்ளவேண்டியது மட்டும் வெகு முக்கியமானது.

நாம் இப்போது வெளியிடும் முறையை நாம்மட்டும் அநுஷ்டித்துஅதனால் பலனடைந்திருப்பதாக இதை வாசிப்போர் எண்ணக்கூடாது. அநேகவருஷங்களாக சர்க்கார் பண்ணைகளில் பரீக்ஷித்துப் பார்த்திருக்கிறார்கள். தென்னிந்தியாவிலுள்ள அநேக கனவான்களும் பரீக்ஷித்துசரியாயிருக்கக்கண்டு அம்முறையை அநுஷ்டித்து அநுகூலம் பெற்றிருக்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் பாளையங்கோட்டை, திருநெல்வேலி, சத்திரம்புதுக்குளம், கோபாலசமுத்திரம், கெங்கைகொண்டான், சேரன் மாதேவி பாப்பான்குளம், ஸ்ரீவைகுந்தம் முதலான அநேக விடங்களில் இம்முறையை நடத்திவருகிறார்கள். கோபாலசமுத்திரத்தில் சுமார் 500-ஏக்கர் வரை இம்முறைப்படி நடுகையாகி, அதில் விசேஷமாய் விளைவுகொடுத்த நிலத்துக்குடையவருக்குத் திருநெல்வேலி விவசாயசங்கத்தார் ஒரு பரிசு அளித்தார்கள். மற்ற ஜில்லாக்களிலும் அநேக இடங்களில் இந்நடுகை நடத்தப்பட்டு வருகிறது. ஆகையால் கிருஷிகர் இதைக் கைக்கொள்வதில் கொஞ்சங்கூட சந்தேகப்படவேண்டியதில்லை.

8-சென்டு விஸ்தீரணமுள்ள நாற்றங்காலை நன்றாய் உழுது சேறாக்கி, எருச்சிதறி, கொளுஞ்சித்தழை கிடைத்தால் அதையும் மிதித்து, 6-பக்காப்படி நெல்விதையை அதில் விதைத்துத் தண்ணீரை வடித்துவிட்டால் நாற்று முளைத்து சரியாய் வளரும். இந்த நாற்று ஒரு ஏக்கர் நடக்காணும். 8 சென்டு நிலத்தில் 100-படி நெல்விதை நாற்றுவிடும் வழக்கம் இருக்க, 6-படி விதை விதைத்தால் போதுமானதென்று நாம் சொல்வதை அநுஷ்டிக்க அநேகர் வெட்கமடைவார்கள். சிலர் 6 படி என்பது எழுத்துப்பிழையோ என்பதாகவும் சந்தேகப்படக்கூடும். 6-படி விதைவிட்டால் போதுமானதென்று நம்முடைய அநுபோகத்தில் திட்டமாய்க் கவனித்திருப்பதால், அவ்விஷயத்தை நன்றாய் வற்புறுத்திச் சொல்லுகிறோம். இன்னும் சற்று சந்தேகங்கொள்ளும் கிருஷிகர், தங்கள் இஷ்டப்படி இந்த

அளவை சற்று அதிகப்படுத்தி 8-செண்டு நிலத்தில் 10-பக்கா நெல் விதையை விதைத்தாலும் சரியாயிருக்கும். எக்கர் ஒன்று நட 10 பக்கா விதைக்குமேல் நாற்று விடவேண்டிய அவசியமேயில்லை.

இவ்விதமாக நாற்றங்காலில் அதிகக் குறைவான அளவு விதையை விதைக்கவேண்டும் என்று நாம் சொல்வதின் காரணம் என்னவென்றால், நெருங்கிய விதைப்பில் நாற்றுமுளைத்து மேல்வருங்காலத்தில், ஒன்றுடன் ஒன்று நெருக்கமடைந்து, மூச்சுவிடக்கூட இடமில்லாமல், ஊசித்தாள் பிடித்து வெளுத்து நோயுற்றுப்போகிறது. அதை அநேகவிடங்களில் "நாற்று நறைத்துப்போயிற்று" என்று சொல்வார்கள். 8-செண்டு நிலத்தில் 150-படி நெல்லைப் பறப்பினாலும் ஒரு நெல்லுக்கும் மற்றொன்றுக்கும் கொஞ்சங்கூட இடையில்லாமலிருக்குமென்பதுமட்டு மன்றி அநேகவிடங்களில் ஓர் அடுக்கு நெல்லுக்கு மேலும் இன்னும் ஓரடுக்கு நெல் இருக்கவேண்டியதாய் நேரிடலாம். இப்படியிருப்பதால், விதைத்த விதைகள் முழுவதும் முளைக்காமல் போகின்றன. முளைத்தவைகளில் சிலது மேல்வருவதேயில்லை. மேல்வந்தவைகளும் நெருங்கி நோயடைந்து போகின்றன. மனிதர் திடகாத்திரமுள்ளவர்களாயும் பலசாலிகளாயு மிருக்கவேண்டுமானால் குழந்தைப் பருவம் முதலே சரியாய் போஷிக்கப்பட்டு சுகசரீரிகளாயிருக்கவேண்டும் என்பதை எல்லாரும் அறிவார்கள். நோயடைந்து மெலிந்து சரியானபோஷணை பெறுதகுழந்தைகள் வாலிபர்களாகி கல்விபயிலுங்காலை அவர்களுக்குண்டாகும் பலசங்கடங்களை நாம் நாள்தோறும் காண்கிறோம். ஒருநாயானது நாலைந்துகுட்டிகள் போட்டால் அவைகளில் மேலான இரண்டுகுட்டிகளை வைத்துக்கொண்டு மற்றவைகளைக் கொன்றுபோடும் வழக்கத்துக்குக் காரணம் இதுவே. 5, 6 குட்டிகள் ஒருதாய்ப்பால்குடித்து வளருமானால் அவைகள் எல்லாம் ஒன்றுக்கும் உதவாமல்போகும். இரண்டுகுட்டிகள்மட்டும் அந்தப்பாலைக்குடித்து வளருமானால், அவைகள் சீக்கிரத்தில் செழித்துவளர்ந்து பருத்த நாய்களாகின்றன. அதைப்போலவே குறைந்த அளவு நெல்விதையை அதிக விஸ்தீரணத்தில் விதைக்கும்போது அதிலுண்டாகும் நாற்றுமுதல்களுக்கு அதிகமான காற்றும் பயிருணவும் அகப்படுமாதலால், அவைகள் அதிக வீரியமாய்த் தழைத்து கறுத்து நன்றாய்க்கிளைத்து வளரும். அவைகளைப்பிடுங்கி நட்டால் அந்தப்பயிர் அதிக திடமாய் செழித்துப் பக்கம்வைத்து மூடுகட்டி வளருவதுமல்லாமல் அதிகமாகவும் பலன்கொடுக்கும்.

இப்படி அதிகக் கலப்பாக விதைத்தால் நாற்று அதிகமாய் வளர்ந்து வேர்கள் ஆழத்தில் சென்றிருக்கும் என்றும், பிடுங்கும்போது வேர்கள் அறுபட்டுக்கெடுதியடையும் என்றும் அனேகர் சொல்லக்கூடும். கலக்கப்பாவின நாற்று ஆழமாய் வேர்விடுவது

வாஸ்தவமே. அவைகளைப்பறிப்பது சற்று வருத்தமென்பதும் வாஸ்தவமே. என்றாலும் 100 படி விதையில் உண்டாகும் நாற்றைவிட 6 படி விதையில் உண்டாகும் நாற்று எண்ணத்தில் எவ்வளவு குறைந்தது என்பதைக் கவனியுங்கள். அப்படிக்குறைந்த நாற்றைப்பிடுங்கும்போது அவசரப்படாமல் சாவதானமாய் வேருடன் மண்ணைக்கிள்ளிப் பறிக்கக்கூடும். இதில் ஒவ்வொருநாற்றாய்ப் பறிக்க வேண்டும் என்னும் ஒன்றைத்தவிர வேறு ஆக்ஷேபனைக்கு இடமில்லை. நாற்றின் வேர்கள் கொஞ்சம் அறுந்துபோனால் நடுகைக்குக் கெடுதியுண்டாவதில்லை. நன்றாய் மூடுகட்டிக்கிளைப்பதற்கு அது ஒரு ஹேதுவாயிருக்கிறது.

இந்தக்காலத்தில் சாதாரணமாகக் கார்நெல் பயிர்செய்வது வழக்கம். சிலவிடங்களில் பாங்குநெல்லும், சிலவிடங்களில் மாப்பிள்ளை சம்பாவும் மற்றவிடங்களில் இவைகளைப்போல நாலுமாதத்தில் விளைவாகும் தினிசுகளையும் பயிரிடுவார்கள். இவைகளை நாற்றுவிட்டு 20-ம் நாளுக்குமேல் 29-ம் நாளுக்குள் பிடுங்கி நடவேண்டும். வெகுகால அனுபோகத்தில் காரில் 29-ம் நாளைக்குப்பின் பிடுங்கிநடும் பயிர் நன்றாய்ப் பலன்கொடுப்பதில்லை. ஆகையால் இவ்விஷயத்தில் கிருஷிகர் ஜாக்கிறதையாயிருக்கவேண்டும்.

நடுகைசெய்வதில் ஒவ்வொருநாற்றாய் நடவேண்டும். தற்காலத்தில் செய்கிறபடி 10, 15 முதல்களை ஒருகற்றையாக எடுத்து நடும்வழக்கத்தைத் தொலைக்கவேண்டும். அப்படி நடுவதில் பயிர் உண்டாகும்போது ஒன்றுடன் ஒன்று அதிகமாய் நெருங்கி,மூச்சுவிடமுடியாமல் கெடுவதுமன்றி அவைகளின் வேர்கள் பின்னிக்கொண்டு சரியாய் மண்ணில் இறங்காமலும், சரியான அளவுக்கு பயிருணவை சேகரிக்கமுடியாமலும் பயிர் க்ஷீணமடைந்து போகின்றது. ஆகையால் நமது முன்னோர்கள் "முதலைக்குறைத்து நெருக்கி நடு" என்ற வழக்கச்சொல்லை உண்டாக்கியிருக்கிறார்கள். அவர்கள் முதலைக்குறைத்து நடுவதின் அநுகூலத்தை நன்றாய் அறிந்திருந்தார்கள். அவர்கள் அனுஷ்டித்தமுறையை நாம் இன்னும் கொஞ்சம் ஜாக்கிறதையாய் அனுஷ்டிக்கவேண்டுமென்பதுதான் எமது கருத்து. ஆகையால் நாம் கிருஷிகரை நமது முன்னோர் அநுஷ்டிக்காத காரியம் ஒன்றையும் செய்யும்படி சொல்லவில்லை. அவர்கள் செய்ததையே சற்று திருத்தமாய்ச் செய்யும்படிதான் சொல்லுகிறோம்.

ஒரு நடுகைக்கும் மற்றொரு நடுகைக்கும் இடையே நாலங்குல இடம் தான் இருக்கவேண்டும். பிசானப் பயிருக்கானால் 7 அங்குல இடை விடலாம். கார்ப்பயிர் குறைந்தகாலத்தில் விளைவடைவதால் அதிகமாய் மூடுகட்டயிடமிராது. ஆகையால் நாலங்குல இடைக்கதிகம் விடாமல் நடுகை செய்யவேண்டும். இதுவும் "நெருக்கி நடு" என்று சொன்ன வழக்கச்சொல்லை அநுசரித்தேயிருக்கிறது. "கார் கலந்துகெட்டது பிசானம் நெருங்கிக்கெட்டது" என்னும் வழக்கச்

சொல்லையும் கவனிக்கவேண்டும். இப்படி ஒவ்வொரு முதலாய் நடுகை செய்தால் பள்ளமான இடங்களில் தண்ணீர் அதிகமாய்க்கட்டி நடுகை அழுகிக்கெடும் என்றும், அதனால் அனேக முதல்களைச்சேர்த்துநடுவதாகவும் சில கிருஷிகர் சொல்லுகிறார்கள். நம்முடைய அநுபோகத்தில் தனி முதல்நடுகைத் தண்ணீரில் அழுகிக்கெடுவது மிகவும் அபூர்வம். இடைவிடாமல் அநேக நாட்களுக்கு மழை பெய்தால்தான் அப்படிப்பயிர் அழுகும். சாதாரண மழைகளிலும் தண்ணீர்க்கட்டிலும் கெடுவதில்லை. மேலும் இப்போது கார்ப்பயிராகும் காலம். மழைகாலமல்ல. ஆனகயால் பயிர் அழுகிப்போகும் என்னும் பயமில்லை.

சில கிருஷிகர் நாம் சொல்லுகிறபிரகாரம் கலக்கமாய் நாற்று விடவில்லையாகையால், தனிமுதல் நடுகைசெய்ய முடியாதென்று சொல்லலாம். ஆனால் அவர்களும் செய்யக்கூடிய காரியம் ஒன்றுண்டு. நாற்றங்கால் வரப்போரங்களிலும், ஊற்றங்கால்களிலும் திடமாயும் உயரமாயும் வளர்ந்திருக்கும் நாற்று அதிகமாயிருக்கும். அவைகளை தனியாகப்பறித்து இரண்டு மூன்று முடி நாற்று அகப்பட்டாலும், அதைக்கொண்டு ஒருவயலில் ஒரு மூலையில் ஒரு சென்டு நிலத்திலாவது ஒவ்வொன்றாய் நட்டு அந்தப்பயிர் எப்படியிருக்கிறதென்று அவரவர்கள் திருப்திக்காகப் பரீக்ஷை பார்க்கலாம்.

இந்த ஒற்றை நடுகையினால் உண்டாகும் அநுகூலங்களாவன:—

(1) பயிர் சீக்கிரத்தில் விளைவுக்கு வரும்.

(2) தாள்கள் வலுத்து மட்டைவைத்து வளருவதால் கதிர் முற்றியவுடன் நிலத்தில் சாய்வதில்லை. எலிகள் கதிர்களைத் திருட முடியாது. நெல் நிலத்தில் அதிகமாக உதிர்ந்துபோகாது.

(3) நெல்மணிகள் அதிகத்திரக்ஷியாயும், கதிர்கள் அதிக நீளமாயுமிருக்கும். மேனியும் அதிகமாய்க்காணும்.

(4) விதைகுறைத்துவிடுவதால் உண்டாகும் லாபம் அதிகமாகும்.

இந்தக் கார்ப்பயிர் அருவடையாகும் காலத்தில் சாதாரணமாக மழைகள் பெய்து மாசூல் கெட்டுப்போவது சகஜம். தஞ்சாவூர் ஜில்லாவில் குருவைப்பயிர் இப்படியே கெடுகிறது. ஆகையால் எவ்வளவு சீக்கிரத்தில் பயிர் விளைவுக்கு வரக்கூடுமோ அவ்வளவுக்கு கிருஷிகருக்கு நன்மை யுண்டு.

இப்படி ஒற்றைநாற்று நடுவதில் எல்லாக்கதிர்களும் ஏககாலத்தில் முற்றுவதில்லையென்னும் ஆக்ஷேபனை சிலர் சொல்லக்கூடும். அது வாஸ்தவமே என்றாலும் அதினால் அதிகக் கெடுதி சம்பவிப்பதில்லை. கிருஷிகர் தற்காலத்தில் நெல்பயிர்சரியானபடி விளைந்த பின்னும் கூட அறுவடை செய்யாமல் நிலத்தில் நெடுநாள் விட்டு வைக்கிறார்கள். இதனால் தானியத்தின் ருசிமிகவும் கெட்டுப்போவதுமன்றி வீணாக உமியதிகக்கனமடைய நேரிடுகிறது. பயிர்

முற்ற விளையும்போது கடைசியில் சில நாட்களில் தானியம் விருத்தியடைவதில்லை; உமியே அதிகக் கனமாகின்றது. ஆகையால் சில கதிர்கள் கொஞ்சம் பச்சையாயிருக்கும்போது அருவடை செய்வதால் கெடுதியில்லை.

சிலர் இந்நடுகையில் வைக்கோல் குறைந்து போகும் எனச் சொல்லுவார்கள். அது சரியல்ல. நிறையில் வைக்கோல் சரியாகவேயிருக்கிறது. அல்லது கொஞ்சம் குறைவுபட்டாலும், தானியம் அதிகமாகக்கிடைப்பதினால் இந்த வைக்கோல் நஷ்டம் வெகு சுவல்பமாகும்.

முக்கியமாக ஒரு ஏக்கருக்கு தற்காலத்தில் செல்லும் விதையின் அளவில் குறைந்தது 60 படி இலாபமிருக்கிறது. இதை எல்லாரும் கவனிக்கவேண்டும். ஒரு கிருஷிகருக்கு 10 ஏக்கர் நன்செய் இருந்தால் 600 பக்கா நெல்விதை இலாபமாகும். இதன் விலை சுமார் 60 ரூபாயாகும். இரண்டுபோகத்துக்கு ரூ. 120 ஆகும். இது ஒரு கிருஷிகருக்கு உண்டாகக்கூடிய இலாபமானால் ஒருகிராமத்துக்கு எவ்வளவு ஆகும்என்பதையும், நமது இந்துதேசத்துக்கே எவ்வளவென்பதையும் கவனிக்கவேண்டும்.

சடம்புப் பசுந்தாள் பயிர்

SUNNHEMP AS GREEN MANURE CROP

சென்றமாதம் வெளியான சஞ்சிகையில் " இருபூ நன்செய்நிலங்கள் உடையவர்களுக்கு ஓர் யோசனை " என்னும் தலைப்பின் கீள் நாம் வெளியிட்டிருக்கும் விஷயத்தைப்பற்றி அநேகவிடங்களிலிருந்து அனேக கிருஷிகர் சில கேள்விகளைக்கேட்டிருக்கின்றனர். அவைகளில் சில முக்கியமான கேள்விகளுக்கு, இப்பத்திரிகையின் வாயிலாகவே விடையளிப்பது உசிதமாயும் மற்றக்கிருஷிகருக்கு உபயோகமாயுமிருக்குமென்று நினைத்து அவைகளை இங்கு வெளியிடுகிறோம். அவை என்னவெனில்:—

(1) சடம்பு 6-வாரம் முதல் 2-மாதக்காலத்துக்குள் புஷ்பிக்கும். பிசானம்அருவடைசாதாரணமாக பிப்பிரவரிமீ 20-தேதிவாக்கில் நடக்கும். அப்போதே சடம்புப் பயிரை விதைத்தால், எப்பிரல்மீ 20-தேதிக்குமுன் புஷ்பிக்கும். அடுத்தகார் சாகுபடி ஜூன் மாதம் 20-ந்தேதிக்குப்பின் ஆகும். ஆகையால் இந்த சடம்புப்பயிர் கார் நெல்பயிருககு பசுந்தாளேருவாக உபயோகப்படுவது எப்படி ?

(2)எப்பிரல் மாதத்தில் சடம்புப்பயிர் விதைக்கலாம் என்றால், அந்த மாதத்தில் மழைபெய்யவில்லையானால் என்ன செய்வது ? பிப்பிரவரி மாதத்திலானால் நிலத்திலேயே பிசானப்பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சிய ஈரம் இருக்கும். ஒருவேளை நெல்பயிர் அருவடையான பின்னும் ஒருவாரம் அல்லது 10-நாட்களுக்குப் பாயக்

கூடிய தண்ணீர் பாய்ச்சல் ஆதாரங்களில் மீந்திருந்தாலும் இருக்கும். அப்படியிருந்தால் அந்தத்தண்ணீரை உபயோகித்துக் கொள்ளக்கூடும். ஏப்பிரல் மாதத்திலோ ஒருக்காலும் தண்ணீர்ப் பாய்ச்சமுடியாது. ஆகையால் என்னசெய்வது ?

(3) ஏப்பிரல்மீ 20 தேதி சடம்புப்பயிரைவெட்டிக் குவித் துவைத்தால் அதுகாய்ந்து கெட்டுப்போகுமல்லவா? பச்சைத்த ழையை சேற்றில் மிதிப்பதைப்போல் அவ்வளவு உபயோகம் காய் ந்த சடம்புத்தட்டையால் உண்டாகாதே? என்பதுதான்.

இந்தக் கேள்விகளில் அடங்கிய விஷயங்களுக்கு ஒரு சமாதா னம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது எப்படியெனில் மூன்று வருஷங்களுக்குமுன் திருநெல்வேலி டெப்டி கலெக்டராயிருந்த ம-ா-ா-ஸ்ரீ இராவ்பகதூர் J. தர்மரங்கராஜா அவர்கள் திருநெல் வேலி தாலுகாவிலுள்ள சிலகிராமங்களில் தழை எருப்பயிரைக் கிருஷிகர் தங்கள் நிலத்தில் விதைத்து உண்டாக்குவதின்அநுகூலங் களைப்பற்றிச்செய்த உபந்யாசத்தைக் கேட்ட ம-ா-ா-ஸ்ரீ வக்கீல் T. S. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் மேற்கண்ட கேள்விகளை எழுதி யனுப்பி அவைகளை எப்படி நிவர்த்திப்பது என்று எழுதுமாறு வேண்டிக்கொண்டார்கள். அப்போது இவ்விஷயத்தைப்பற்றி ஆழ்ந்து யோசிக்கவேண்டியதாய் நேரிட்டது. சிலவருஷங்களுக்கு முன் சைதாப்பேட்டை விவசாயப்பண்ணையில் மெஸ்தர் W. R. இராபர்ட்ஸன் துரையவர்களும் C. பென்ஸன் துரையவர்களும்கால் நடைத் தீவனத்துக்காக சோளம், கம்பு முதலியபயிர்களை யுண் டாக்கி புஷ்பித்துக்கதிர்வாங்கும்போது அவைகளை வெட்டி நிலத் துக்குத் தண்ணீர் பாய்ச்சியதில் அறுதாள்களிலிருந்து மறுதாள் உண்டாகி வளர்ந்து வந்ததும், இவ்விதமாக நான்குமுறை வெட்டி நான்கு முறைகளிலும் மறுதாள்கள்உண்டாகிக்கால்நடைத்தீவனம் அதிகமாகக் கிடைத்ததென்பதும், ஞாபகத்துக்கு வந்ததால்,அந்தப் படி வெட்டினால் இந்த சடம்புப்பயிரிலும் மறுதாள்கள் உண் டாகலாம் என்னும் யோசனை அவருக்கு உண்டாயிற்று. இதைப் பரீக்ஷிப்பதற்காக சென்றவருஷம் குலவணிகபுறத்தில் புன்செயில் கரும்புப்பயிர் சாகுபடி செய்தபோது கரும்புக்கால்களுக்கு ஊடேயிருந்த மேடுகளில் சடம்பைவிதைத்துப் பயிராக்கிப் புஷ் பித்தவுடனே அதைவெட்டிக் கரும்புக்குப் பசுந்தாள் எருவாக உப யோகிக்கப்பட்டது. அப்படி வெட்டும்போது அரையடிமுதல் இரண்டடிவரையிலும் பற்பல உயரத்தில் தாள்விட்டு வெட்டிப் பரீ க்ஷித்ததில் ஒவ்வொன்றிலும் மறுதாள்கள் உண்டாயின. குறுகிய தாள்களிலிருந்து மறுதாள்கள் அதிகமாக உண்டாகவில்லை. நீண் டதாள்களிலிருந்துண்டான பசுந்தாள் அதிகமாயிருந்தது. இவ்வி ஷயம் திருநெல்வேலி விவசாயசங்கத்தின் மெம்பர்களில் சிலருக்குத் தெரிவிக்கப்பட்டது. இந்த நூதனமுறையை ம-ா-ா-ஸ்ரீ, வக்கீல்

சிதம்பரம்பிள்ளையவர்கள் நாங்குநேரித்தாலுகா புழியன்குளம் கிருமத்தில் கையாடிப் பலனடைந்ததாகவும் அறிகிறேம்.

இவ்வருஷம் திருநெல்வேலி ஜில்லா பாளையங்கோட்டையில் ம-ா-ா-ஸ்ரீ, இராவ்பகதூர் J. தர்மரங்கராஜா அவர்களுடைய நன் செய் நிலங்களில் சுமார் இரண்டு ஏக்கரில் சடம்புப்பசுந்தாள் பயிர் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறதாயும், அதிலுண்டான தாள்களை வெட்டி, அவைகளிலிருந்து மறுதாள்கள் உண்டாகி வளர்ந்துவருவ தாகவும் தெரியவருகிறது. நேரில் இதைக்கண்டு திருப்தியடைய விரும்பும் எல்லாரும் அங்கேபோய்ப் பார்க்கலாம்.

இவ்விதமாக முதல்தரம் வெட்டப்பட்டதாள்களைக் காயவைத் துக்கால் நடைகளுக்குத் தீவனமாக உபயோகிக்கலாம். வடஜில் லாக்களில் சடம்புத்தட்டையைக் கால்நடைத் தீவனமாய் அநேக இடங்களில் உபயோகித்து வருகிருர்கள். கால்நடைகளுக்கு சடம் புத்தாள்கள் கொழுப்புள்ள தீவனமாகும். இப்படி உபயோ கிப்பதே சிலாக்கியமான முறையாகும். அல்லது, வெட் டிய பசுந்தாள்கள் காயுமுன்னமே எருக்குழியில் அடுக்கடுக் காய்ப் பறப்பி ஒவ்வொரு அடுக்கின்மேலும் கொஞ்சம் சாணத்தைப் பறப்பிவைத்தால் தாழ்கள் அழுகிச் சாணத்துடன் கலந்து சத் துள்ள எருவாகும்; இப்படி செய்வதும் சிலாக்கியமானதுதான். வெட்டிய ஒரு வாரத்துக்குள் அறுதாள்களிலிருந்து மறுதாள் கள் துளிர்த்துவளரும். இப்படி மறுதாள்கள் நன்ருய் வளர்வதற்கு அந்தக்காலத்தில் ஒரு மழை பெய்யுமானல் அதிகஅநுகூலமா யிருக்கும். அப்படி மழை பெய்யவில்லையானுலும், மறுதாள்கள் உண்டாகாமலிராது. கோடைமழைகள் பெய்யாமலிராது. சிலதினங் கள் கழித்தாவது ஒரு மழை பெய்யும். பயிர் அப்பொழுது நன்ருய் வளரும். வெட்டினதற்கு இரண்டுமாதக்காலத்துக்குள் மறுபடியும் புஷ்பிக்கும். அப்போதுகார்ப்பருவம் செய்யவேண்டிய காலமாகவு மிருக்கும். அந்தக்காலத்தில் தழையை அடியுடன் வெட்டித்தறித்து நிலத்தைச்சேருக்கி அதில் இந்தத் தழையைச்சிதறி உழுது நட வேண்டும்.

இந்தமுறையை அநுஷ்டிப்பதால் முதல் வெட்டிய தாள்களும் கெட்டுப்போகாமல் சரியான கலப்பெருவாகின்றது. இரண்டாவது வெட்டப்படும் மறுதாள்கள் "பசுந்தாள்" எருவாக உபயோக மாகின்றது, இந்தப்பசுந்தாள்களை சேற்றில் மிதித்து நடுகை செய் தால் தழை அழுகும்போது அதினின்று ஒருவிதமான வாயுகிளம்பி வெளிவரும். அதனல் குளிர்ச்சியடைந்திருக்கும் நிலத்தில் பயிர்களு க்கு அவசியமான உஷ்ணம் உண்டாவதுமன்றி, நிலத்தில்காற்ருேட் டமும் உண்டாகின்றது. பயிர்கள்சரியாய் வளருவதற்கு நிலத்தில் எப்போதும்தண்ணீர் கட்டிநின்று பூமியின்வழியாய் வடியாமலிருக் கலாகாது. பயிர்கள் வியாபித்திருக்கும் நிலத்தில் வேர்களில் தண்

ணீரும் காற்றும் மாறி மாறிப்புகவேண்டும். தழைகள் அழுகும் போதுண்டாகும் வாயுவானது இந்தக்காற்ரோட்டத்தை சரியாய் உண்டாக்குகிறது, பச்சைத்தழை நிலத்தில் அழுகுவதால் உண்டாகும் எல்லாவிதபயன்களையும் இங்கே வெளியிடவேண்டியது அவசியமில்லை. அதில் அதிக பிரயோஜனம் உண்டென்பதில் சந்தேகமில்லை.

நெல் தினிசுகளில் ஒரு நேர்த்தியான இளவித்து

A FINE SHORT DURATION VARIETY OF PADDY

நெல் சாகுபடியில் கார், பிசானம் என்னும் இரண்டு பருவகாலங்கள் உண்டு. காலமழைகள் பெய்யும் பிசானத்தில் வல்வித்து தினிசுகளையும், சாரல் மழைபெய்யும் காரில் இளவித்துத் தினிசுகளையும் சாகுபடி செய்கிரூர்கள். விதைத்ததுமுதல் அறுவடையாக 4-மாதங்களுக்கு மேற்செல்லும் தினிசுகளை "வல்வித்து" என்றும், அதற்குக் குறைந்தகாலத்தில் விளைவாகும் தினிசுகளை "இளவித்து" என்றும் பாவிக்கலாம். வல்வித்துத்தினிசுகளை சாதாரணமாய் நாற்றுப்பாவி நடுகை செய்வார்களேயன்றி விதைப்பு செய்வதில்லை. இளவித்துக்களை சாதாரணமாக நடுகைசெய்வதில்லை. பொடி (புழுதி) யிலும், தொளி (சேறு)யிலும் விதைப்பார்கள். ஒருதினிசுநெல் விளைவடையச் செல்லும்காலம் குறையக்குறைய அதன் சாகுபடியில்தொளிவிதைப்பையே முக்கியமாக நடத்துகிரூர்கள். சரியாய் உழுது, உறம்வைத்துத் தொளியாக்கி விதைப்புச்செய்து பயிரிட்டால் இளவித்துத்தினிசுகள் வல்வித்துத் தினிசுகளைவிட அதிகமாய் மேனிதரும். வல்வித்துப்பயிர்களுக்கு வைக்கும் உறம் எப்படியிருந்தாலும் அவைகள் ஜீரணித்து பயிருக்கு உபயோகமாகும். இளவித்துப் பயிர்களுக்கு சீக்கிரத்தில் ஜீரணமாகக்கூடிய எருவகைகளும் தழைகளுமே உபயோகமாகும். மாட்டுச்சாணமும் ஆவரங்குழையும் வல்வித்துப் பயிர்களுக்கு உபயோகமாகும். இவைகளை இளவித்துப் பயிர்களுக்கு உபயோகிக்காமல் சீக்கிரத்தில் ஜீரணமாகக்கூடிய ஆட்டுறமும், புங்கம், பூவரசு, வாகை, கொளுஞ்சி முதலிய தழைகளும் உபயோகமாகும்.

திருநெல்வேலி ஜில்லாவில் சாகுபடியாகும் முக்கியமான வல்வித்து நெல்தினிசுகளாவன:—

முத்து வெள்ளை 8-மாதம், குலைவாழை $7\frac{1}{2}$-மாதம், சருடன் சம்பா 7-மாதம், வெள்ளை 6-மாதம், சிறுவெள்ளை (வாலிசுரமுண்டான்) $5\frac{1}{2}$-மாதம், அரிக்கிராவி $5\frac{1}{2}$-மாதம், மிளகி $5\frac{1}{2}$-மாதம், ஆனைக்கொம்பன் $5\frac{1}{2}$-மாதம், ஈர்க்கு சம்பா $4\frac{1}{2}$-முதல் 5-மாதம், கார்த்திகைச்சம்பா $4\frac{1}{2}$-முதல்5-மாதம், வீதிவிடங்கன் $4\frac{1}{2}$-மாதம்.

இளவித்து தீனிசுகளாவன:—கார்சம்பா 4-மாதம், மைக்குருவை $3\frac{1}{2}$-மாதம், மொட்டைக்குருவை $3\frac{1}{2}$-மாதம், குருவைக்களையான் $3\frac{1}{2}$-முதல்4-மாதம் புழுதிபிறட்டி $3\frac{1}{2}$-முதல்4-மாதம், மதுரை மணல்வாரி $3\frac{1}{2}$-மாதம், வால்குருவை 3-மாதம், 10-நாள், மாப்பிள்ளை சம்பா 80-நாள் முதல் 3-மாதம், இவைகாளில் ஆற்றப்பாய்ச்சலுள்ளநன்செய்நிலங்களில், பிசானத்தில் ஆனைக்கொம்பனும், காரில்கார்சம்பாவும் பயிரிடுகிரூர்கள். தென்காசி அம்பா சமுத்திரம், நாங்குநேரி தாலூகாக்களிலுள்ள மலைப்பிர தேசங்களில் ஆனைக்கொம்பன்,

முத்துவெள்ளை, குலைவாழை முதலிய வல்வித்துக்கள்பிசானத்தில் சாகுபடியாகும். இந்தத்தாலூகாவின் மற்றப்பாகங்களிலும், திருநெல்வேலி, ஸ்ரீவைகுந்தம், ஸ்ரீவில்லிபுத்தூர்தாலூகாவின் சிலபாகங்களிலும். பிசானத்தில் ஆனைக்கொம்பன், அரிக்கிராவி, கார்த்திகைச்சம்பா இந்தத்தினிசுகள் சாகுபடியாகின்றன ஸ்ரீவைகுந்தம் தாலூகாவில் பாய்ச்சல் தண்ணீர் குறைவாயிருக்குமிடங்களில் பிசானத்தில் ஈர்க்குசம்பா சாகுபடியாகிறது. சங்கரநயினார்கோவில்தாலூகாவிலும், ஸ்ரீவைகுந்தம் தாலூகாவில் பெரும்பான்மையிலும் பிசானத்தில் கார்த்திகைச்சம்பா சாகுபடிசெய்கிறார்கள். காரில் தென்காசி, அம்பாசமுத்திரம் நாங்குனேரி தாலூகாக்களில் வீதிவிடங்கன், மைக்குருவை கார்சம்பா, மாப்பிள்ளைசம்பா, மொட்டைக்குருவை, சித்திரைக்காலியும், சங்கரநயினார் கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர்தாலூகாக்களில் மதுரைமணல்வாரியும் சாகுபடிசெய்கிறார்கள்.

இந்த நெல்தினிசுகளிலெல்லாம் ஆனைக்கொம்பன் அதிகசிலாக்கியமாய் எண்ணப்படுகிறது. அது சாப்பாட்டுக்கு மிகவும் நேர்த்தியானது. சரியான விலைக்குவிற்கும். இதைப்போல சாப்பாட்டுக்கு ஏற்றதாயிருக்கும் தினிசுகளெல்லாம் 5 மாதங்களுக்கு மேற்பட்டு விளையக்கூடியனவாயிருக்கின்றன. அவைகளுக்கு நீடித்தகாலத்துக்குத் தண்ணீர் பாயவேண்டியதாயிருக்கிறது. சில வருஷங்களில் மழைக்குறைவு சம்பவிப்பதால் ஜலாதாரங்களில்தண்ணீர் குறைந்து பயிர் கதிர்வாங்குமுன்னமே தீவுநேரிட ஏதுவாயிருக்கிறது. விளைவுக்கு வந்தாலும் பொதுவாக சரியான மேனி காண்கிறதில்லை. இந்த வல்வித்துகளைச் சாகுபடி செய்வதால் அடிக்கடி கஷ்டமும் நஷ்டமும் நேரிடுகின்றன. அப்படியிருந்தும் கிருஷிகர் புராதனவழக்கத்தையே அநுசரித்து இளவித்துத் தினிசுகளில் சிலாக்கியமானவைகளைப் பயிரிட்டுப் பலனடைய எண்ணுகிறதில்லை. சிலருக்கு குறைந்த காலத்திலும், குறைந்த தண்ணீர் ஆதாரத்தைக்கொண்டும் விளையக்கூடிய சிலாக்கியமான இளவித்துத் தினிசுகள் இருப்பதாகவே தெரியாது. தெரிந்தாலும் அந்த தினிசுகள் சாகுபடிக்கு லாயக்காயிருக்குமானால், அவைகளைத் தங்களின் முன்னோர்கள் முன்னமே கொண்டுவந்து பயிரிட்டிருக்கமாட்டார்களா? அப்படிமுன்னோர்கள் கொண்டுவந்து பயிரிடவில்லையாகையால், அந்தத்தினிசுகள் தங்கள் நிலங்களில் சாகுபடிசெய்யத் தக்கவைகளல்லவென்பதே அவர்களுடைய மூடநம்பிக்கை.

என்றாலும் இப்போது வரவரக் கிருஷிகருக்குள் இந்த மூட நம்பிக்கையும் அறிவீனமும் குறைவுபட்டுக்கொண்டு வருகிறது. மற்றவிடங்களில் என்ன தினிசுகள் பயிராகின்றனவென்று விசாரித்து அவைகளை நாம் ஏன் சாகுபடி செய்யக்கூடாது என்று கவனிக்கும் அநேகர் தற்காலத்தில் அநேக விடங்களில் இருக்கிறார்கள். ஆனைக்கொம்பன் முதலான வல்வித்துகளுக்குச் செல்லும் காலத்தில் ஏறக்குறைய பாதிநாளில் விளையக்கூடியதும், சாப்பாட்டுக்கு யோக்கியமானதுமான ஒரு தினிசு இளவித்து இருக்குமாகில் கிருஷிகர் தற்காலத்தில் அதை சந்தோஷமாய்ப் பயிரிட எண்ணுவார்களென்பதில் தடையில்லை.

நான் இராதாபுரத்தில் டிப்டி தாசில்தாராயிருந்தகாலத்தில் அந்த பிராந்தியங்களில் பயிராகும் நெல்தினிசுகளைப்பற்றி விசாரித்ததில் மாப்பிள்ளை சம்பா 3 மாதத்துக்குள் விளையக்கூடியதும், ஆனைக்கொம்பன் நெல்லுக்கு அநேகமாய் சமானமானதென்று சொல்லக்கூடியதும், போஜனத்துக்கு யோக்கியமானதும், உயர்ந்த விலைக்கு விற்கக்கூடியதுமான தினிசு என்று தெரிய

வந்ததின்பேரில், அந்த வித்தைதிருநெல்வேலி தாலூகாவில் மல்லகுளம் என்னும் கிராமத்தில் என்னுடைய நிலங்களில் பயிரிட்டுப்பார்த்ததில் மேற்கண்ட குணங்கள் வாஸ்தவத்தில் அந்த தினிசு நெல்லுக்கிருப்பதாய் அநுபோகத்தில் கண்டறிந்தேன். இந்த தினிசுக்கு "சின்ன சித்திரைக்காலி" என்றும், "வெள்ளை சம்பா" வென்றும், "ஸ்வர்ணவாரி" யென்றும், "சிறு வெள்ளை" யென்றும், திருநேல்வேலி ஜில்லாவில் பற்பல விடங்களில் பற்பல பேர்கள் வழங்கி வருகிறது. இதைப்போன்ற தட்டை வெள்ளை யென்ற ஒரு தினிசு மதுரையில் சாகுப்டி செய்யப்படுகிறது.

மாப்பிள்ளை சம்பா சாகுபடி செய்வதற்கு ஒருகாலநிர்ணயமில்லை. இதை ஒரு வருஷத்தில் ஒரே இடத்தில் 3-போகம் சாகுபடி செய்யாலம். இராதாபுரம் முதலியவிடங்களில் இந்தத்தினிசு ஏக்கர் ஒன்றுக்கு 2000-பக்காவுக்கு அதிகமான மேனிவிளைவாக நான் கண்டிருக்கிறேன். பச்சையாகக் குத்தினாலும் புழுங்கலாசக்குத்தினாலும் ஆனைக்கொம்பன் அரிசியைப்போல ருசியுள்ளது. குருவைக்களையான், புழுதிபிறட்டி, கல்மணல்வாரி இந்தத்தினிசுகள் குறைந்தகாலத்தில் விளையக்கூடியவைகளாயினும், அவைகள் போஜனத்துக்கு யோக்கியமற்றவைகள். மானாவாரிக்குளங்களில் மேற்கண்ட தினிசுகள் சாகுபடி செய்வதற்கு பதிலாய், மாப்பிள்ளை சம்பாவைத்தக்க உரம்வைத்து சாகுபடி செய்தால் கிருஷிகர் அதிகமான இலாபத்தை அடையலாம்.

இதன் சாகுபடியில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன:—

(1) நிலத்தை நன்றாய் உழுது தண்ணீர்கட்டி 15-நாள்களுக்கு சேர் அழுகவேண்டும். அந்தக் காலத்தில் நிலத்தை அடிக்கடி உழவேண்டும்.

(2) உழுமுன்நிலத்தில் ஆட்டுமந்தைமறித்தாவது ஆட்டுறம்வைத்தாவது தண்ணீர்கட்டவேண்டும்.

(3) கொளுஞ்சி முதலான தழையை அதிகமாய்ப்போட்டு மிதிக்கவேண்டும்.

(4) சேற்றில் விதைப்பது உத்தமம். நடுவதாயிருந்தால் நாற்றுவிட்டு 25 நாள்களில் நடவேண்டும். மானாவாரிக்குளங்களில் பிசானத்தில் பாங்குநெல்லும், காரில் மாப்பிள்ளை சம்பாவும் சாகுபடிசெய்தால் நலம். ஆற்றுக்கால் பாய்ச்சலுள்ள நன்செய்களில் பிசானத்தில் ஆனைக்கொம்பனும் காரில்பாங்கு நெல்லும் சாகுபடிசெய்யலாம்.

இவ்வாறு இளவித்து தினிசுகளைப்பயிரிடுவதால், இரண்டுபோகத்துக்கிடையே நன்செய்நிலங்களில் பசுந்தாள் எருவுக்காக எதாவது ஒருபயிர்சாகுபடிசெய்ய சாவகாசம்கிடைக்கும். இதுவும் விசேஷமாய்க்கிருஷிகர் கவனிக்கத்தக்கவிஷயம்.

மணக்காடு }
5—6—09. } P. N. MUHAMMAD MIRAN.

மாதப்பருவங்கள்

MONTH'S OPERATIONS

அனேக ஜில்லாக்களில் இந்தமாதத்தில் மணற்பிரவை நிலங்களில் "குள்ளன் கம்பு" (குண்டன்கம்பு) சாகுப்டி செய்வார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவில் பவானி, ஈரோடு பொள்ளாச்சி தாலூகாக்களில் புன்செயிலும்

கம்பு பயிராகிறது. இதை சற்று முன் கூட்டியே சாகுபடி செய்தால், அது கதிர் வாங்கி புஷ்பிக்கும் காலத்தில் மழையில் அடிபடாமல் காப்பாற்றலாம். தாமதமாய்ப் பயிரிட்டால் மழையில் அடிபட்டு பூ உதிர்ந்து கதிர்களில் சரியாய் மணி பிடிக்காது. ஆகையால் முதல் மழை விழுந்தவுடனேயே கம்புப் பயிர் விதைக்கவேண்டும். மானாவாரிக்குளங்களின் ஆயக்கட்டிலும், சாரல் மழை (மேல்காத்து மழை) காலத்தில் தண்ணீர்ப் பெருக்குண்டாகும் கால்வாய்ப் பாசன நன்செய்களிலும் இந்தமாதம் கரும்பு நடலாம். கோயம்புத்தூர், கரூர், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை தாலூகாக்களிலும் அதிகமாய் கரும்பு நடுவார்கள். ஆனால் இவ்வருஷம் கோடையில் அடிக்கடி மழைகள் பெய்து நிலத்தின் காய்ச்சலைக் கெடுத்துவிட்டதால் ஈரங்கொள்ளும் நிலங்களில் கரும்புப்பயிர் அவ்வளவு வீரியமாய் உண்டாகாது. கரும்புப்பயிர் நடுமுன் நிலம் அதிகமாய்க் காய்ச்சல் கொண்டிருக்கவேண்டியது அவசியம். அப்படியில்லாத இடங்களில் சரியான எருவின் உபயோகத்தாலேயே பயிர் செழிக்கவேண்டியதாயிருக்கும்.

இந்த மாதத்தில் பாங்குநெல் நடவேண்டியது. திருநெல்வேலி ஜில்லாவில் சிவந்திபட்டி, சமுகரங்கபுரம், மல்லகுளம், ரெட்டியாபட்டி, ஸ்ரீவைகுந்தம் பாப்பான்குளம் முதலான பல ஊர்களிலுள்ள குடிகள் இந்த நெல்லை இவ்வருஷம் பயிரிட ஏற்பாடு செய்து வருகிறார்கள் எனக்கேட்டு சந்தோஷிக்கிறோம். ஒரு நூதனமுறையில் அநுகூலமிருக்கிறதென நமது கிருஷிகர் கண்டால், அதன்பின் அவர்களை நாம் அதிகமாகத் தூண்டாமலேவிவசாயவிர்த்தியை நடத்துவார்கள். ஈரோடு தாலூகாவில் அந்நதானம்நெல் இந்த மாதம் விதைக்கவேண்டும். தாராபுரத்தில் கோடைநெல் விதைக்கவேண்டும். கிணற்றிரவை நிலங்களில் கேள்வரகு இந்தமாதம் நடுகைசெய்வார்கள். தென்ஜில்லாக்களில் கேள்வரகு பயிராகும் இடங்களிலெல்லாம், தற்காலத்தில் துவரையைக் கலப்புப்பயிராக விதைக்கிறார்கள். இப்படி செய்வதைவிட கேள்வரகுப்பயிருக்குக் களை வெட்டும் காலத்தில், பயிரின் ஊடே ஊடே நிலக்கடலையென்னும் மணிலாக்கொட்டையை விதைத்து மண்மூடிவிட்டால், கேள்வரகுப் பயிருக்குப் பாயும் தண்ணீரின் உதவியால் மணிலாக்கொட்டைப்பயிர் நன்றாய் உண்டாகி நல்ல பலன்கொடுக்கும். மணிலாக்கொட்டையைத் தனிப்பயிராக விதைத்தால், அதற்கு அதிக நாட்களுக்குத்தண்ணீர் பாய்ச்சவேண்டியது அவசியமாகும். கேள்வரகுடன் கலப்புப்பயிராய் விதைத்தால் அவ்வளவு அதிக தண்ணீர்செல்லாது. மேலும் கலப்புப்பயிராய் விதைக்கும்போது தானியப்பயிரும் மணிலாக்கொட்டைப்பயிரும் ஜாஸ்தியான பலன் கொடுக்கிறதாக அனேக வருஷங்களாகப் பாலூர் சர்க்கார்பண்ணையில் செய்த பரீக்ஷையினால் வெளியாகிறது. அதுவுமன்றி மணிலாக்கொட்டையை வெட்டியெடுப்பதால் அடுத்தபயிருக்கு நிலம் சரியாய்ப்பண்பட்டிருக்கும். உடனே அதில் உளுந்து, பச்சைப்பயிறு இவைகளில் ஏதாவது ஒரு பயிரை விளைவித்துக்கொள்ளலாம். துவரை சாகுபடிசெய்தால் இப்படித்தாளடிப்பயிர் செய்யஇடமிருக்காது.

சொற்பமழைகள் பெய்யும் இடங்களிலெல்லாம் இந்த மாதத்தில் புன்செய் நிலங்களில் கம்புப்பயிரும் எள்ளும் விதைக்கவேண்டும்.

இந்தமாதம், இஞ்சி, மஞ்சள், மக்காச்சோளம், சேனை கருணை முதலிய பயிர்கள் நடவேண்டும். பவானிக்கருகில் நேர்த்தியான சேனைக்கிழங்கு பயிராகிறது. மலையாளத்தைத்தவிர மற்ற இடங்களில் இஞ்சிப் பயிருக்குக் கொஞ்சம் நிழல் அவசியமாகையால் அதன் ஊடே சடம்பு, கொத்தவரை

முதலான சீக்கிரமாய் வளரக்கூடிய செடிகளை விதைத்து வளர்ப்பது நலம். பின் இவைகளை அந்தப்பயிருக்குத் தழை யெருவாக உபயோகிக்கவும் செய்யலாம். மரவள்ளி (எழிலேக்கிழங்கு) ஆரரூட்டு (Arrow root) பயிரிட இது தருணம்.

செங்கற்பட்டு முதலான அனேக ஜில்லாக்களில் ஒருபோக நன்செய் நிலங்களில் இந்தமாதம் கேள்வரகு நடுவதற்காக நாற்று விட்டிருக்கிறார்கள். அப்படி நடும்போது இடையிடையே சடம்பு, அவுரி முதலான விதைகளை யும் விதைத்து வைக்கவேண்டும். இப்படி செய்வதால் பிசானத்தில் நெல் பயிர் செய்யும்போது இந்தச்செடிகளின் பசுந்தழை கொழுமையான எருவா கும். திருநெல்வேலி ஜில்லா தென்காசி தாலூகாவில் சிவலார்குளம் கீழப் பாவூர் முதலான கிராமங்களில் கேள்வரகுடன் மொச்சைக்கொட்டையை ஊடேயூடே விதைத்துவைப்பார்கள். பிசானம் நடுகைக்குத் தாமதமாய்த் தண்ணீர்வந்தால் மொச்சையில் மாசூல் கிடைக்கும். மொச்சை பயிரிடும் நோக்கம் அதில் கிடைக்கும் அற்பமாசூல் எடுப்பதற்காகவல்ல. ஆனல் முன்கூட்டித் தண்ணீர்வரும்போது, மொச்சைச்செடிகளைச் சேற்றில் மிதி த்து எருவாக்குவதே அவர்களுடைய முக்கிய நோக்கம். மொச்சை யில் கிடைப்பதைவிட அதிகமான தழைகள் கிடைக்கக்கூடிய மற்றகாய்த் தானியப்பயிர்களையும் விதைக்கலாம். இதனல் அனேக விதங்களில் நிலம் பண்படுகிறது.

சிலஜில்லாக்களில் பயிர்களைச் சுற்றிலும் ஊடேயும் புளிச்சி செடிகளை விதைத்துப் பயிரிடுவது வழக்கம். அதில் நார்கிடைக்கும். இதைவிட சடம் புப்பயிரை விதைத்தால் அதில் உதிரும் இலைகள் நிலத்துக்கு எருவாவதன்றி புளிச்சிநாரைவிட சிலாக்கியமான நாரும் கிடைக்கும்.

கோயம்புத்தூர் ஜில்லா பவானிதாலுகாவில் மலைக்குச்சமீபமாகவும் கோயம்புத்தூர்தாலுகாவிலும் புன்செயில் ஒருவகைகேள்வரகு இந்தமாதத் தில் விதைப்பார்கள். சற்று ஆழமாகஉழுது விதைத்தால் கோடையில் ஈரம்தாங்கிப்பயிர் கெட்டுப் போகாமல் விளைவுக்குவரும்.

பவானி, ஈரோடு, கரூர்தாலுகாக்களில் செவ்வல்நிலங்களில் இந்த மாதம் பருத்தி விதைப்பதுண்டு. இந்தமூன்று தாலுகாக்களிலும் கரிசல் நிலங்கள் இல்லை. பூநூல் (Bourbon) பருத்தியும் நாடன்பருத்தியும் சாகுபடியாகின் றன. இந்த நிலங்களை ஆழ உழுது கொஞ்சம் எருவிட்டுச்சாகுபடிசெய்தால் அதன்பலன் கிருஷிகருக்கு நன்ருய்த்தெரியும்.

கொள்ளேகால் தாலுகாவில் புன்செயில் இந்த மாதம் எள்சாகுபடியா கும். மழைப்பதம் சுமாராயிருக்கும் மற்றவிடங்களிலும் எள்சாகுபடிசெய்ய லாம். கோயம்புத்தூர் ஜில்லாவில் புன்செயில் சாமை, சோளம், வரகு, தினை பெரும்பயறு மொச்சை, கடுகு, துவரை இந்தப்பயிர்கள் சாகுபடியாகும். அவைகளுக்கு வேண்டிய பருவங்கள்காலத்தில் செய்யவேண்டும். உடுமலைப் பேட்டைதாலூகாவில் வெள்ளைப்பூண்டும் சீரகமும்சாகுபடியாகும். சீரகப் பயிருக்குவிதைப்பு களையெடுப்புப்பருவங்கள் வெகு ஜாக்கிரதையுடன் செய்ய வேண்டும். தோட்டக்கால்களில் இந்தமாதம் மிளகாய்ச்செடி நடவேண்டி யது. அனேக ஜில்லாக்களில் இந்த மாதத்தில் நன்செய் நிலங்களில் வாழை நடுவார்கள். தண்ணீர்த்தட்டு சாதாரணமாய் அடிக்கடியுண்டாகும் நன்செய் களில் வாழை நடுவது இலாபகரமாகும்.

கரூர் தாலூகாவில் இந்தமாதம் சில நன்செய் நிலங்களில் மணிலாக் கொட்டை சாகுபடிசெய்கிற வழக்கமுண்டு. தண்ணீர்த்தட்டு அதிகமாய் உண்டாவதினல் நெல் சாகுபடியைவிட்டு, அதற்கு பதிலாய் மணிலாக் கொட்டை சாகுபடி செய்யப்படுவதாய்த் தெரிகிறது. தண்ணீர்த்தட்டுண் டாகும் மற்றவிடங்களிலும் கிருஷிகர் நெல்பயிரைவிட்டு இதைப்போன்ற இலாபகரமான புன்செய் பயிர்களை சாகுபடிசெய்தால் மிகவும் நலமாகும்.

கொள்ளேகாலம் தாலூகாவில் இந்தமாதம் புன்செய் நிலங்களில் பட் டுப்பூச்சிகளுக்கு ஆகாரமாகிற மல்பெரியென்னும் முசுக்கட்டைச்செடி களை நடுவார்கள். இந்தச்செடிகளை மலைப்பிரதேசங்களான மற்ற ஜில்லாக் களிலும் உண்டாக்கி பட்டுப்பூச்சிகளை விர்த்திசெய்தால் பட்டுநூல் வியாபா ரத்துக்கு நல்ல வழியாகும்.

பொள்ளாச்சி தாலூகாவில் நேர்த்தியான கரிசல் நிலங்கள் இருக்கின் றன. அவைகளில் இந்த மாதம் புன்செயில் மிளகாய்ப்பயிர் நடுவார்கள். தெலுங்கு ஜில்லாக்களில் சிலதில் பருத்திக்கரிசல் நிலத்தில் இப்படியே மிள காய்ப்பயிரை புன்செய்ப்பயிராக ஏராளமான விஸ்தீரணத்தில் சாகுபடி செய்வது வழக்கம். இதுபோலவே திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பருத் திக்கரிசல் நிலங்களில் மழை சுமாராய்ப் பெய்யுமிடங்களில் புன்செய்பயி ராக மிளகாய் நட்டுப் பரீக்ஷிக்கலாம்.

குறிப்புகள்

NEWS AND NOTES

மைசூர் சமஸ்தானத்தின் தென்பாகத்திலுள்ள காப்பித்தோட்டங்களில் சென்றமே மாதத்தில் பெய்த கனமழையில் அநேகம் ஆயிரம் காப்பிச் செடிகள் காற்றில் சாய்ந்துபோயினவென்றும், நாலுநாட்களில் 25-அங்குல மழை பெய்திருக்கிறதென்றும் தெரியவருகிறது. திருநெல்வேலி முதலான சில ஜில்லாக்களில் வருஷம் முழுவதுக்கும் பெய்யும் மழையின் அளவு சுமார் 26-அங்குலமாகும். அவ்வளவும் சேர்த்து மைசூர் இராஜ்யத்தில் 4-நாட்களில் பெய்திருக்கிறது ஆச்சர்யமல்லவா?

*
* *

1909-ம் ௵ எப்பிரல்மீ 30தேதியுடன் முடிவாகும் வருஷத்துக்குகவ ர்ண்மெண்டார் சென்னை இராஜதானியிலுள்ள எல்லாஜில்லாக்களிலும் நிலவி ருத்திசம்பந்தமாகக் கடன்கொடுப்பதற்காக $10\frac{1}{2}$-லக்ஷ ருபாயிக்குமேல்சாங்க் ஷன்செய்திருக்கிறார்கள். அதில்சென்ற ஜனவரிமீ 31-தேதிவரையும் சுமார் $8\frac{1}{2}$-லக்ஷருபாய் குடிகளுக்குக் கடன்கொடுத்தாச்சுது. கஞ்சம், விசாகப்பட் ணம், கிருஷ்ணா, குண்டூர், பல்லாரி, செங்கற்பட்டு, சென்னை, கோயம்புத் தூர், தஞ்சாவூர், திருச்சிரனப்பள்ளி, மதுரை இந்த ஜில்லாக்களில் குடிகளுக் குச் சரியான அளவுக்குக் கடன்கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் கர்னூல், வடஆர்க்காடு ஜில்லாக்களில் கொடுக்கப்பட்ட கடன்தொகை சற்றுகுறைந்து போயிற்றென்றும் திருநெல்வேலி முதலான மற்றஜில்லாக்களில்சரியானபடி கடன்பட்டுவாடா செய்யப்படவில்லையென்றும் தெரியவருகிறது. இதற்கு கிருஷிகருடைய அறியாமையே முக்கியமான காரணம் என்றுசொல்லலாம். அனேகநாட்டுப்புரத்து கிருஷிகருக்கு நிலவிர்த்திக்காகவும், கிருஷிகருடைய விவசாயச் செலவுகளுக்காகவும் சர்க்காரில் கடன்கொடுப்பதாகவே தெரி

யாது. இன்னும் சாவகாரிகளிடத்திலேயே கடன்வாங்கிக் கெடுவார்கள். இப்படி கெடாமல்காக்க ரெவினியூ இலாகா உத்தியோகஸ்தரும் சற்று இறக்கமும் பரோபகாரசிந்தையு முள்ளவர்களாயு மிருத்தல்வேண்டும்.

* * *

இந்தியா ஐக்கிய மாகாணங்களில் பந்து ஜில்லாவிலுள்ள கேன்ரதியின் குருக்கே ஒரு அணைகட்டுவதற்கு 60-லக்ஷரூபாய் சர்க்காரில் செலவழித்து அவ்வேலை எறக்குறைய முடிவாகிவருகிறது. ஒருலக்ஷம் ஏக்கர்நிலங்களுக் கதிகமாய்த் தண்ணீர்த்தட்டுக் காலத்திலும் ஜலம்பாயும்படியான அளவு தண்ணீர் அந்த அணையினல் தடுக்கப்படுகிறது. அந்த அணையிலிருந்து பிறியும் காலின்வழியாய் அந்தத் தண்ணீர் பாசனமாகும். இவ்விதமாக தாம்பிரபரணி ஆற்றின் உற்பத்தி ஸ்தானமான பாபநாசம் மலையில் அவ்வாற்றின் குறுக்கே ஒருஅணை கட்டக்கூடிய சௌகரியமான இடம்ஒன்று இருக்கிறது. அதில் அணைகட்டினல் அனேக லக்ஷம் ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர்பாயக்கூடிய ஒருபெரிய ஏரியுண்டாகும். இந்த அணையை சீக்கிரத்தில் கட்ட உத்திரவு செய்யவேண்டுமென்று கிருஷிகர் எத்தனையோ முறை கவர்ண்மெண்டாருக்கு மனுச்செய்தும் இன்னும் தாமதத்திலிருக்கிறது. எப்போது நமது திருநெல்வேலிக் கிருஷிகருக்கு நல்லகாலம்வருமோ கடவுளுக்குத்தான் தெரியும்.

* * *

சென்றசித்திரைமாதத்தில் மதுரையில் நடந்தசித்திராபவுர்ணமி உத்சவத்தில், கால்நடைக்காக்ஷியைக் கண்ணுறும் சமயத்தில் கூடியகிருஷிகர்கூட்டத்தில் ம.-ா-ா-ஸ்ரீ ராவ்பகதூர் G. ஸ்ரீனிவாஸராவ் அவர்கள் விவஸாயவிர்த்தியென்னும் விஷயத்தைப்பற்றி இங்கிலீஷிலும்தமிழிலும் உபந்நியாசம் செய்தார். ஜப்பான்தேசத்தில் விவசாயம் விர்த்தியான விதத்தையும், மலமும் மூத்திரமும் நமது தேசத்தில் சரியானபடி உபயோகப்படுவதில்லையென்பதையும், இவை முதலானபல விஷயங்களைப் பற்றிப்பேசினர். ம.ா-ா-ஸ்ரீ. செல்வரங்கராஜா அவர்கள் கால்நடைகளை விர்த்திசெய்தல் என்னும் விஷயத்தைப்பற்றி ஒருவியாசம் எழுதிவாசித்தார். கோவில்பட்டிசர்க்கார் பண்ணைமானேஜராகிய ம.ா-ா-ஸ்ரீ திருமுருகநாதபிள்ளையவர்கள் பருத்தியை சால்விதைக் கருவிகொண்டு விதைப்பதின் அநுகூலங்களைப்பற்றி ஒருவியாசம்வாசித்தார்.

* * *

பம்பாய் இராஜதானியின் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் தார்லார் ஜில்லாவிலும் அதன்சமீபத்திலும் விளைவாகும் சிலாக்கியமான "புரோச்சு" பருத்தியின் சாகுபடியை விர்த்திசெய்யவும், அப்படி விளைவிக்கப்பட்ட பருத்தி சரியான விலைக்கு விற்கப்படவும் வேண்டிய ஏற்பாடுகள் சென்ற வருஷத்தில் ஆரம்பித்தார்கள். அதுபோலவே இவ்வருஷத்திலும் தக்கமுயற்சி செய்யப்பட்டு வருகிறது. வேறுவகை பருத்தியைவிட இந்த புரோச்சுப் பருத்திக்கு சென்றவருஷத்தில் 1344 இராத்தல் கொண்ட பொதியொன்றுக்கு ரூ 41 அதிகமாகக்கிடைத்தது. சர்க்கார் பண்ணையில்விளைந்தபுரோச்சு பருத்திக்கு மற்ற தினுசு பருத்திகளைவிட மேற்சொன்ன பொதியொன்றுக்கு ரூ 56 அதிகம் கிடைத்தது. இப்படி அதிகலாபம் கிடைப்பதை கிருஷிகர் கவனித்து நாளது வருஷத்தில் 15,000 இராத்தலுக்கு அதிகமான பருத்தி விதை வாங்கினர்கள். கால சுபிக்ஷக் குறைவினல் இவ்வருஷத்தில் பருத்தி மாசூல் அளவு குறைந்துபோயிற்று என்றாலும் சுமார் 300 பொதி புரோச்சுப்பருத்தி இவ்வருஷம் விலையாகலாம்.

நூதன புத்தகங்கள்

மில்டேரி இந்து பாகசாஸ்திரம்.

மானிடஜென்மமெடுத்த நாம் எவ்வளவோ பிரயாசமும் தேககஷ்டமுமெடுத்து சம்பாதிப்பது சாண்வயிற்றுக்காகவே. அவ்வயிற்றை நிரப்புவதை மனதிற்குத் திருப்தியாகும்படி புசித்துவந்தால் ஜீவநாள்வரையில் அழியாத தேகவல்லமை பெற்றிருக்கக்கூடும். அவ்வுணவுகளில் "மாம்ஸம் மாம்ஸத்தை விருத்திசெய்யும்" என்கிறபடி இப்பிரபஞ்சத்தில்பெரும்பாலார் மாம்ஸபக்ஷிணிகளாயிருக்கின்றனர். அவர்கள் மாம்ஸத்தை நன்முய் சமையல் செய்துபுசிக்கும் பக்குவத்தைத்தெரிந்துகொள்ளும்பொருட்டு அக்பர் பாட்சா, சிவாஜி, ஸரபோஜி மஹாராஜாக்களும் இன்னும் அநேக பிரபுக்களும் ஆவலோடு உருசியுடன் புசித்த அநேகமுறைகளும், மஹம்மதியர்களது சிலஅருமையான பாகங்களும், மாம்ஸபட்சணம் செய்யாதவர்கட்கு உபயோகமாகும்படி அரிசி, ட்ருப்பு, ஜலம் இவற்றின் சுத்திகளும், மல்லிகைப்பூவாசனை அன்னம், வெங்காயத்தாளித அன்னம்,மல்கோபாப் பழப்புலவு, பகாராபுலவு முதலிய சைவமுறைகளும்,துவையல்,ஊறுகாய் வகைகளும்,பலகார வகைகளும், பாயஸம், சரபத்துவகைகளும் வசனநடையி லச்சிட்டுளது. சற்று வாசிக்கத்தெரிந்த பெண்டுகள் முதல் ஒருவரைக்கேட்காமலே பாகங்களைச் செய்யலாம்.

விலை அணு 8, வி. பி. சார்ஜ் அணு 3.

விநோதம்வடிக்கைக் கதாமஞ்சரி

எல்லாம் சிரிப்பு! எல்லாம் வேடிக்கை, வாங்கி வாசியுங்கள்.

இதை வாசிப்பவர்களும் கேட்பவர்களும் வயிறெல்லாம் புண்ணாகும்படி கீழே விழுந்துவிழுந்து சிரிப்பார்கள். படிக்கப்படிக்க மிக வேடிக்கையாயிருக்கும். இப்புத்தகத்தை வாங்கி வாசிப்பவர்கட்கே இதன் உண்மைவிளங்கும். விலை அணு 6, வி. பி. சார்ஜ் அணு 3.

ஜெயங்கொண்ட சௌந்தரவல்லிக்கதை.

ஆண் பெண்முதலிய் சகலரும் மிகவேடிக்கையாக வாசிக்கும்படி செவ்விய தமிழ்நடையில் எழுதப்பட்ட ஓர் அருமையான கதை.

கதைபடிக்க அவாக்கொள்வோர் இதைதப்படிக்குந்தோறும் சந்தோஷக்கடலில் மூழ்கி ஆனந்தங்கொள்வாராயினும் முடிவில் தெளிந்த ஞானத்தையும் பெறுவார்களென்பது திண்ணம். கதையின் மூலமாகவே பல அருமையான நீதிவிஷயங்களை அற்புதமாயெடுத்துக் காட்டியுள்ளது.

விலை ரூபா 1, வி. பி. சார்ஜ் அணு 4.

ஆசாரத்திரட்டு.—இது ஓர் அருமையான இந்துசாஸ்திரம், இந்துக்களாகிய நாம் பிரதிதினம் நடந்துகொள்ளவேண்டிய விதிகள் நேமநிஷ்டைகள், அனுஷ்டானங்கள் முதலிய சுமார் 200-விதிகட்குமேல் வசனநடையிலச்சிட்டுள்ளது. விலை அணு 4, வி. பி. அணு 3.

மேற்கண்டுள்ள புத்தகங்களைக் கீழ்க்கண்டவருக் கெழுதி வி. பி. மூலமாகவாவது நேராகவாவது பெற்றுக்கொள்ளலாம். தங்கள் முழுவிலாசத்தையும் தெளிவாயெழுதி இந்தபேப்பரின் பெயரையும் கண்டெழுதவும்.

சுகந்த ஸ்நாநட்போடி

இந்த வாசனையுள்ள பொடியை பிரதிதினம் குளிக்கும்போது உடம்பிற்குத் தேய்த்துக் குளித்துவந்தால் வியர்வைநாற்றம், கற்ருழைநாற்றம், அழுக்குத்தேமல், உடம்பில் நமை, சொரி, சிரங்கு, கைகால் எரிச்சல், மேகசாங்கை, மேகவூரல், கிரந்திமுதலிய இன்னும் அநேகவித தோலைப்பற்றிய வியாதிகள் நிவர்த்தியாவதன்றி தேகத்தில் சுகந்தவாசனை கமகமவென்று வீசிக்கொண்டே ஆரோக்யமாயிருக்கும்.

டப்பி 1-க்கு அணு 4. 6-டப்பி ரூபா 1-4. 10-டப்பி ரூபா 2.

க. பெ. நாராயணசாமி முதலியார், கமலநாயகி விலாஸ்,
நெ. 27, வைக்கோற்காரன் தெருவு, வேப்பேரி போஸ்ட், சென்னை.

சுகந்த பரிமள மூக்குத்தூள்

இச்சுகந்த பரிமள மூக்குத்தூளானது சில மூலிகை மருந்து முதலிய 12-வகை தினுசுகளும் சேர்த்து வெகு பிரயாசையுடன் செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரு சிட்டிக்கையெடுத்து காலணா சாதாரண மூக்குத்தூளுடன் கலந்துவிட்டால் அந்தத்தூள்முழுவதும் அதிமனோரம்மியமான வாசனைமயமாய்விடுவதுடன் அதன் காரத்தையும் நெடுநாள் பாதுகாக்கும். ஜலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், தலைநோய், ஒற்றைத்தலைவலி, மண்டைக்குத்தல், நாசியில் துர்நாற்றம் முதலிய வியாதிகளும் இருந்தவிடம் தெரியாமல் பறந்துபோம். அடிக்கடி தூள் போடும்படி தூண்டும் அபேக்ஷையை நீக்கி அவ்வப்பியாசத்தை சிறுகச்சிறுகத் தாமதப்படுத்தும் குணமும் இதனிடத்துள்ளது. அநேக பிரபுக்கள் தங்கள் வீடுகளில் இதை குடும்பஅவிழ்தமாக வைத்து உபயோகித்துவருகின்றார்கள். இவ்வளவு பிரபல்யமுடையதாயும், மேற்கூறிய வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயுமுள்ள ஷை மூக்குத்தூளால் பல சுகுணங்களே நிறைந்துள்ளனவென்று அநுபவத்தில் தெரிந்துகொள்ளலாமேயன்றி நமது மூக்குக்குநேராக நாமே புகழ்ந்துசொல்வதில்பயனில்லை. ஒரு தடவையாகிலும் பரீக்ஷித்துப் பார்ப்பீராக. கிரயம் புட்டி 1-க்கு அணா 4, வி. பி. சார்ஜ் அணா 3. 12-க்கு ரூபா 2—8—0, வி. பி. சார்ஜ் அணா 8.

தந்தசுத்திப் போடி

ஜன்னியினாலாவது சீதளத்தினாலாவது சைத்தியத்தினாலாவது மேகத்தினாலாவது பல் அசைதல், குத்தல், கடுத்தல், பல் நோய், பல்லில் ஈர்கட்டுதல், ஈர்கள் வீச்கம், ஈர்களில் ரணம், பல்லில் சீழ் இரத்தம் வருதல், பல் ஜிலுஜிலுப்பு முதலிய வியாதிகளையுடையவர்கள் இந்த வெண்ணிறம் பொருந்திய பற்பொடியினால் பிரதிதினம் பல் துலக்கிவந்தால் 3-4 தினங்களில் நிவர்த்தியாக்கி ஈறை கெட்டிப்படுத்தி பற்களை இறுக்கி சகலதுன்பத்தையும் ஓட்டிவிடும். நெடுநாளாய் அனுபவத்திற்கு வந்தது. 4-5 வயது குழந்தைகளுக்குக்கூட இதை உபயோகப்படுத்தி வழக்கத்தில் கொண்டுவந்தால் ஆயுசுமட்டும் பல்லைச்சார்ந்த வியாதிகள் யாதொன்றும் அணுகாது. பெண்கள் புருஷர்கள் கிழவர்கள் யாவரும் உபயோகிக்கலாம் பல் கறுக்காது. டப்பி 1-க்கு அணா 4. 6-டப்பி ரூபா 1—4. 10 டப்பி ரூபா 2.

கூந்தல்வளர் சுகந்த பரிமளத்தைலம்.

நண்பர்காள்! தாங்கள் அநேகவித கூந்தல்தைலத்தைப் பார்த்தும் உபயோகித்தும் இருப்பீர்களாயினும் இதைப்போல் எங்கும் பார்த்திருக்கமாட்டீர்கள். இத்தைலத்தை உபயோகித்தால் தலைமயிர்கள் மேகம்போலும், நாகப்பழம்போலும் கறுத்து செழிப்பாக வளருவதுடன் தலையின் சுண்டையும் நீக்கிவிடும். மண்டையின் மூளைக்குக் கொதிப்பையும், கபாலவரட்சியையும் நீக்கி மயிர்கால்களுக்குக் குளிர்ச்சியையும் உண்டுபண்ணி, கண்ணில் நீர்வடிதல், கண் அருகல், கண்எரிவு முதலான நேத்திரரோகங்களை நீக்கி கண்களுக்கு மிகுந்த குளிர்ச்சி தருவதுடன் நல்ல பிரகாசத்தையுண்டுபண்ணும். வாங்கி உபயோகித்துப்பார்க்க இதன் பெருமை தெரியும்:

ஆழாக்குதைலமடங்கிய டப்பி 1-க்கு கிரயம் ரூபா 1.

மேகவெள்ளைச் சூரணம்

இது பல காரணங்களினாலுண்டாக்கப்படுகிற மேகவெட்டை, நீர்சுருக்கு, நீர்குத்தல், நீரெரிச்சல், நீர்தாரையிலிருந்து சீழ் ரத்தம் வடிதல் முதலிய வியாதிகள் ஆண் பெண் இருதிறத்தவர்களுக்கும் 10-நாளில் ஆச்சரியப்படத்தக்க அனுகூலத்தைக் கொடுக்கும். டப்பி 1-க்கு அணா விலை 12. 6-டப்பியின் விலை ரூபா 4.

☞ மேற்கண்டுள்ளவற்றை கீழ்க்கண்டவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர், கமலநாயகி மெடிகல் ஹால்,
நெ. 27, வைக்கோற்காரன் தெருவு, வேப்பேரி போஸ்ட், சென்னை.

பி. சுப்பராய், பறங்கிப்பேட்டை,

தென்னாற்காடு ஜில்லா.

தயவுசெய்து

இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

1. "தாதுபுஷ்டி மருந்து":— அதன்குணத்தை எழுதி முடியாது. அனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாதுநஷ்டம், பலஹீனம், ஆண்குறிதுவளல், பசியின்மை, கண், கால்எரிவு, தேகவரக்ஷி, சீக்கிரத்தில் ஸ்கலிதம், சொப்பனஸ்கலிதம், கை, கால், இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேகவெள்ளை, வெட்டை, நீரிழிவு, மதுமேகம், சதையடைப்பு இன்னும் பற்பல மூத்திர ரோகங்களைப் போக்கும். சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, போகசக்தி, ஜீரண சக்தி, அபரிமிதமான தாதுவிருத்தியை யுண்டாக்கும். நீர்த்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூபா 2, வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

2. "அக்கினிமாந்தத்திற்கு மருந்து":—பசியின்மை, புளித்தஏப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய்நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரையில்லாமை, பித்தஉபத்திரவங்களை சொஸ்தப்படுத்தும். பசிதீபனமும், தேகஆரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு அணா 8, வி. பி. செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

3. "பிரமேக நிவாரணி":— எந்த காரணத்தினால் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை, நீர்குற்றல், நீர்தாரை எரிவு, சீழ், ரத்தம்வடிதல், முதலிய வியாதிகளை ஆண் பெண் இருதரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. செலவு ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

4. "லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்":— தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டிய விலையுயர்ந்த வஸ்து. தந்தநோய், வாய்நாற்றம், அஜீரணம், பித்தவாய்வு இதுகளை நீக்கும். தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது சாப்பிட்டபின் 2-மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணம் செய்வதுடன் வாயில் அநேகமணிநேரம் சுகந்தவாசனை யிருக்கும். பிரதிதினம் காலையில் இரண்டுமாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்கினிமந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தினாலுண்டாகும் வயற்றிழிவு, வயிற்று நோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்துவந்தால் ஜன்னி கிட்டநாடாது; ஜன்னியில் கொடுக்க ஜன்னி தீரும். இதில் லாகிரிமுதலான யாதொரு அபாயகரமான வஸ்து சேரவில்லை. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சைகற்பூரம் முதலிய அநேக விலைபெற்ற மருந்துசாமான்களும் வாசனைதிரவியங்களும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சைகற்பூரம் முதலாகிய வாசனை வஸ்துக்கள் உபயோகிக்கவேண்டியது அனாவசியம். அறை குழந்தைகள் முதல்வயது சென்றவர்களுக்கு சளி, இருமல், காசம், காலரா, பிளேக், சுரம முதலானவைகளுக்கு வயதுக்கும் தேகத்துக்கும் தகுந்தபடி 1 முதல்

4-மாத்திரைகள் வரையில் வெற்றிலைச்சாற்றில் கொடுக்க சுகமாகும். சீசா 1-க்கு விலை அணு 4.. இந்தியாவில் 1 முதல் 12 சீசாக்கள்வரையில் அனுப்ப பாக்கிங்கு, தபால்சார்சு அணு 5-ம் சிலோனுக்கு அணு 7-ம் பிரத்தியேகம்.

5. "சர்வரோய் சம்ஹாரன்":—இத்தைலம் கொஞ்சம்தேய்த்தால் கை, கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், முடக்கம், மார்புநோய், தலைநோய், கழுத்துநோய், பக்கசூலை, இடுப்புநோய், சூதகவலி, பார்சுவாயு, மேகவாயு முதலான இன்னும் தேகத்தில் உண்டாகும் எல்லா நோய்களையும் சீக்கிரத்தில் குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. செலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

6 "சுகந்த கூந்தல் தைலம்":—இத்தைலத்தால் தலைமயிர், மீசை, கண் இமை, வெகு செழிப்பாகவும், நெருக்கமாகவும், கறுப்பாகவும் வளரும். கண்களைக் குளிரச்செய்யும். சகல கண்நோய்களும், தலைநோய்களும் நீங்கும். செம்மட்டைமயிர் கருக்கும். மயிர் உதிராமல் கார்க்கும். கண்களுக்கு பிரகாசத்தைதரும். விலை புட்டி 1-க்கு அணு 8, வி. பி. செலவு 1 அல்லது இரண்டு சீசாக்கள் வரையில் அனுப்ப அணு 5 பிரத்தியேகம்.

7. "நேத்திர பிந்து".— கண்ணோய், கண்குற்றல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைக்கட்டல், மாமிசம் வளர்ந்திருத்தல், பூவிழுந்திருத்தல், கண்சிவப்பு, எரிச்சல், கண்இமை புருவம் இவைகளின் வலி, கண் புகைச்சல் இவைகளை குணப்படுத்தும். மாணுக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகுசிறந்த ஔஷதம். மருந்து உபயோகித்தால் கண்ணடி போடவேண்டியது அனாவசியம். சீசா 1-க்கு விலை அணு 8, வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள்வரையில் அணு 5 பிரத்தியேகம்.

8. "கர்ணபிந்து":—காதில் சீழ்வடிதல், வலி, குத்தல், குடைச்சல், காதடைப்பு, இரைச்சல், செவிடு இவைகளை குணமாக்கும். செவி நன்றாய் கேட்கும். சீசா 1-க்கு விலை அணு 8, வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணு 5 பிரத்தியேகம்.

9. "சர்வபடைசம்ஹாரன்":— இடுப்பு, தொடையின் இடுக்கு முதலிய இடங்களில் உண்டாகி ஓயாத நமைச்சலைத்தந்து வெகு சீக்கிரத்தில் மற்ற இடங்களில் படரும் மேகப்படை, சொரிசிரங்கு, தடிப்புப்படை, தேமல் முதலியவைகளை அடியோடு குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை அணு 4, வி. பி. செலவு 1-முதல் 6 சீசாக்கள்வரையில் அணு 5 பிரத்தியேகம்.

10 "பேதிமாத்திரைகள்".—வயிற்றில் வலி, ஆயாசமில்லாமல் சுகமாய் பேதியாகும். அஜீரணம், பித்த உபத்திரவங்கள், சகலவாயு, மலச்சிக்கல், அக்கினிமாந்தம், வாதம், கை கால் முதலிய அவயவங்களின் குடைச்ரல், வலி, சகலசுரங்கள் முதலியதுகளை சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு அணு 8, வி. பி.செலவு1 முதல் 6 சீசாக்கள்வரையில் அணு 5 பிரத்தியேகம்.

11. "ஜுவரசம்ஹாரி":—தீராத நாள்பட்ட சகல சுரங்கள், குளிர்ச்சுரம், முறைசுரம், வாதசுரம், பித்தசுரம், அஸ்திசுரம், மலேசுரம், மார்வலி, காமாலை, பிடரிவலி, இடுப்புவலி, விலாவலி, முழங்கால்வலி, உடம்பு வெளுப்பு, மயக்கம், தாகம், இருமுறைசுரம், நாலாமுறைசுரம் முதலிய சகல சுரங்களை அடியோடுபோக்கும். டப்பா 1-க்கு ரூபா 1, வி. பி. செலவு அணு 5 பிரத்தியேகம்.

பி. சுப்பராய், பறங்கிப்பேட்டை,
தென்னாற்காடு ஜில்லா.

'தென்னிந்திய விவசாயம்'

32 பக்கங்களுடன் மாதந்தோறும் வெளியாகிறது

வருஷ சந்தா தபால் உள்பட ... ரூ 3 0 0

	ரூ.	அ.	பை
விவசாய விளக்கம்	1	4	0
தென்னை	1	0	0
கரும்பு	1	0	0
நெல்	1	0	0

தபால் செலவு பிரத்தியேகம்.

ஜி. இராஜகோபால் பென்ஷன், விவசாய இன்ஸ்பெக்டர்,

தென்னிந்திய விவசாயம்,

வண்ணாரப்பேட்டை,

சென்னை.

The South Indian Mills Co., Ltd.
TINNEVELLY.

தென் இந்திய மில்ஸ் கம்பெனி (லிமிடெட்)
திருநெல்வேலி
மூலதனம் ரூ. 900000.

ரூ. 100 பெருமான சாதாரண பங்குகளுக்கு விண்ணப்பம் இப்போது வாங்கப்படுகிறது.

விவரங்கள் திருநெல்வேலி ஆபீசுக்கு யெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். பருத்திக்கொட்டையிலிருந்து எடுக்கப்படும் சுத்தமான நெய் ஆகஸ்ட்டுமீ முதல் ஷை கம்பெனியில் கிடைக்கும்.

THE SAIDAPET INDUSTRIAL CO., LTD.
SAIDAPET

சைதாப்பேட்டை இண்டஸ்டிரியல் கம்பெனி
லிமிடெட், சைதாப்பேட்டை

60, 50, 40, 30 நெம்பருள்ள வேஷ்டிகளும், புடவைகளும் விலை சரசமாய் கிடைக்கும். துரிதமாய் வேலைசெய்யும் தறிவேலை ஷை கம்பெனியில் எல்லா ஜாதியாருக்கும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. மற்ற விவரங்கள் அறியவேண்டியவர்கள் சைதாப்பேட்டை இண்டஸ்டிரியல் கம்பெனி காரியதரிசி யவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

இந்தியா, பர்மா, சிலோன் முழுமையும் பேயர்பெற்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட கம்பேனி,

காதர் அண்டு யூசப் பிரதர்ஸ்

கெடியார வர்த்தகர்கள் இந்தியா கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு கெடியாரம் சப்ளை செய்கிறவர்கள் நெ. 30. B. V. சென்னை. E.

நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளதுமான ஸ்காந்தமல்லாத (Non Magnetic) சர்தார் (Sirdar) லீவர் ரூபாய் 12, வெள்ளி 18.
Oxydised ரூ. 14.



நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளது ஸ்காந்தமல்லாத **(Non Magnetic)** **(Lever)** லீவர் ரூபாய் 8, வெள்ளி 14.

நெ. 101. நிக்கல் மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி யுள்ளதும் டயல்மேல் சிஷ்டம் லீவர் பேடண்டு மார்க்கு நடு அளவு 3 8 0

„ 1. நிக்கல் மேல்பார்வை யுள்ளதும், மேல்சாவி யுள்ளதுமான ரெயில்வே ரெகுலேட்டர் ரிஜிஸ்டர் கண்டயம் ஸ்டாம்பு 7 0 0

„ 104. வெள்ளி முழுமூடியுள்ளதும், மேல்சாவி அல்லது உள்சாவியுள்ளதும் சிறியது அல்லது நடு அளவுள்ளதுமான ஹண்டிங்க் கெடியாரம் 12 8 0

„ 10. வெள்ளி மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி அல்லது உள்சாவி யுள்ளதும்,15-கெம்பு செதுக்கினதும் நடு அளவுள்ளதுமான பேடண்டு லீவர் கெடியாரம் 16 0 0

„ 108. வெள்ளி இரண்டு பக்கமும் மூடிபோட்டதும், மேல் சாவி அல்லது உள்சாவி யுள்ளதும் 15-கெம்பு செதுக்கினதுமான பேடண்டு லீவர் $\frac{1}{2}$-ஹண்டிங் கெடியாரம் நடு அளவுள்ளது 20 0 0

N. B.—இன்னும் வெஸ்டு எண்டு ஜான்பாரல் முதலிய சம்பெனியாரால் செய்யப்பட்ட பலவிதமான கெடியாரங்களும், வெள்ளியிலும், பொன்னிலும் 150-ரூபாய் விலைவரையில் இக் கம்பெனியில் கிடைக்கும். கேட்லாக் தபால் சார்ச்சு இல்லாமல் அனுப்பப்படும். ஒவ்வொரு கெடியாரத்துடன் ஒரு வெல்வெட் பெட்டி ஒரு கண்ணாடி, ஒரு மெயின் ஸ்பிரிங்கும், வில், காரண்டி பத்திரமும் கொடுக்கப்படும்.

Printed by G. C. Loganadham Bros, at the Guardian Press, Mount Road, Madras.